முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.80 /2022

நாள். 17.12.2024 வா.சா.1 – திரு.ராமபாண்டி

த/பெ - திரு.குழைக்காதர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) நீங்கள் உங்கள் மனைவி தாக்கல் செய்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரி தான். வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் தெற்கு வள்ளியூர் கிராமத்தில் உள்ளது. நீங்கள் என்ன வேலை செய்து வருகிறீர்கள் என்றால் தொழில் செய்து வருகிறேன். உங்களுக்கு இடங்கள் வாங்கி விற்பனை செய்வதில் அனுபவம் உண்டு என்றால் சரி தான். என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் புல எண். 1284/2A ல் உள்ள 10 செண்டில் கிழக்கடைய உள்ள பாதையினை பிரதிவாதி அடைத்து விட்டதாலும் அதனை மறைத்து பத்திரம் பதிவு செய்ததாலும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன்.

2) 1ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரரின் மகன் என்றால் சரி தான். 2ம் பிரதிவாதி பாஸ்கரன் உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறையில் அண்ணன் ஆவார். இந்த வழக்கில் எத்தனை சொத்து விவரங்கள் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் 4 சொத்து விவரங்கள் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆறுமுகத்தம்மாள் என்பவருக்கு

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.12.17 13:55:59 +0600

பாத்தியப்பட்டது. 1979 ல் ஆறுமுகத்தம்மாளிடம் இருந்து சுவாமி தாஸ் என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் பாதையோடு கிரையம் பெற்றுள்ளார்.

3) ஆறுமுகத்தம்மாள் இந்த வழக்கு புல எண். 1284/2 ல் எவ்வளவு இடம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் 10 செண்டு இடம் பாதையோடு கிரையம் கொடுத்துள்ளார். 1979 ல் ஆறுமுகத்தம்மாளிடம் இருந்து சுவாமி தாஸ் என்பவர் கிரையம் பெற்றுள்ளதாக கூறுகிறீர்கள் அதன் அசல் ஆவணம் உங்களிடம் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக சாட்சி கூறுகிறார்.

4) நீங்கள் சொத்தை வாங்கி விற்பனை செய்த வகையில் சொத்தின் முன் ஆவணங்கள் மற்றும் சொத்து விவரங்கள் ஆகியவற்றினை குறித்து பார்ப்பதற்கு தெரியும் என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ஆனது 05.10.1979 சுவாமி தாஸ் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரி தான். அந்த கிரைய ஆவணத்தில் கிரையம் பெற்றவர் சுவாமி தாஸ் மற்றும் அவரது மனைவி வள்ளியம்மாள் ஆகிய இருவரும் சேர்ந்து கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

5) உங்களது கட்சிப்படி சுவாமி தாஸ் என்பவரிடம் இருந்து மட்டும் தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரி தான். சொத்து விவரத்தில் அ.பு.ச. 1284/2, ஏக்கர் 2, செண்டு 21 ல் மேற்கடைய பங்கில் தெற்கடைய செண்டு 10 என்றும் மேற்படி நம்பரில்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.12.17 13:56:06 +0600

மேல ஓரப்பாகம் நான்கில் ஒன்றில் கிழக்கடைய 5 லிங்ஸ் அகலத்தில் 380 லிங்க்ஸ் நீளத்தில் கண்ட மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி 5 லிங்ஸ் பாதையில் பங்கு 1/5 ல் வள்ளியம்மாளுக்கும், சுவாமி தாஸ்க்கும் பாத்தியப்பட்டது என்றால் சரி தான்.

6) சுவாமி தாஸ்க்கு இந்த ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி 5 லிங்ஸ் பாதையில் 1/10 பங்கு மட்டுமே பாத்தியம் என்றால் சரி தான். மீதமுள்ள 4 பங்கின் உரிமையாளர்கள் யார் யார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வள்ளியம்மாள் அவர்களிடம் இருந்து நீங்கள் எந்த பங்கும் கிரையம் பெறவில்லை என்றால் சரி தான். வள்ளியம்மாளுக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்று உங்கள் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி தான்.

7) வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் உங்கள் மனைவி சுபா லெட்சுமி பெயருக்கு வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரி தான். வா.சா.ஆ.2 சொத்து விவரத்தில் சுவாமி தாஸ் என்பவரிடம் இருந்து கிரையம் பெறும் போது மேற்படி 5 லிங்ஸ் பாதை முழுவதையும் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் 1/10 பங்கு மட்டும் உரிமை பெற்ற சுவாமி தாஸ் என்பவரிடம் இருந்து முழு சொத்தினையும் அவருக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளது செல்லாது என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.12.17 13:56:13 +0600

8) வழக்கு சொத்தில் தற்போதைய உட்,பிரிவு தெரியுமா என்,றால் புல எண். 1284/2A. 1284/2B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சொத்திற்கு தெற்கு பக்கமாக உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் கிடையாது. சுவாமி தாஸின் வாரிசுகள் தெற்கு வள்ளியூர் ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சுவாமி தாஸ்க்கு வாரிசுகள் கிடையாது. வா.சா.ஆ.2 ஏற்பட்ட காலத்தில் வள்ளியம்மாளுடைய வாரிசு சான்று, இறப்பு சான்று ஆகியவற்றை கேட்டு பெற்றுக் கொண்டீர்களா என்றால் கேட்டோம்.

9) அவர் வள்ளியம்மாள் இறந்து விட்டதாகவும் நான் மட்டுமே ஏக வாரிசு என கூறி விட்டார். வள்ளியம்மாள் என்பவரின் வாரிசு சான்றிதழ் இல்லாமல் உங்களது மனைவி பெயருக்கு ஏற்பட்ட வா.சா.ஆ.2 ஆவணம் செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. பாதையில் உள்ள ஏனைய பங்குதாரர்கள் எல்லோரும் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றால் சரி தான். அவர்களையும் இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கப்பட வேண்டும் என்றால் சரி தான்.

10) எதிர் வழக்குரையை நீங்கள் படித்து பார்த்துள்ளீர்களா என்றால் படித்து பார்த்துள்ளேன். வழக்கு புல எண். 1284 ஆனது 1284/2A2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். புல எண். 1284/2A2 க்குரிய பட்டாவானது 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரி தான். அவர்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.12.17 13:56:19 +0600

தவறுதலாக பட்டா பெற்றுள்ளார். வழக்கு சொத்து உங்கள் மனைவி பெயருக்கு எப்போது கிரையம் ஏற்பட்டது என்றால் 2012 ம் ஆண்டு ஏற்பட்டது. 2012 ல் கிரைய ஆவணம் ஏற்பட்ட போது உங்கள் மனைவி பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரி தான். நீங்கள் பட்டா கேட்டு விண்ணப்பத்த தேதி எப்போது என்றால் ஞாபகம் இல்லை. புல எண். 1284/2A2 க்குரிய பட்டா எண். 3471 ஆகும். அது 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அந்த பட்டாவானது **பி.வா.சா.ஆ.1** ஆகும்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.12.17 13:56:25 +0600